**தலைப்பு 217 – நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன காலி மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 217 - நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்,

ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பந்தி தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடாமை / போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3(அ) |
| | | 2. பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.2.1 |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.2.2 |
| | | 4. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3(ஆ) |
| | | 5. சிக்கனமற்ற கொடுக்கல், வாங்கல்கள் | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும் | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.8 |

**2. பொருண்மையானதும் மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகள்**

---

(அ) சட்டரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகி, அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட மற்றும் கவனிப்பாரற்ற பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் கட்டியெழுப்புதல்.

(ஆ) சிறுவர் உரிமைகளை மேம்படுத்தி உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

(இ) மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் சேவைகள் திணைக்களத்திற்கு தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் சட்டச் சேவைகளை வழங்குதல்

(ஈ) தேசிய / சர்வதேச நியமங்களின் பிரகாரம் சிறுவர் உரிமைகளுடன் தொடர்புடைய சட்டங்களை திருத்துதல்

(உ) சிறுவர் உரிமைகள் வினைத்திறனாக பாதுகாக்கப்பட்டதா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதற்கு முறையான உத்தியோகத்தரை பயிற்றுவித்தல் மற்றும் தற்போதுள்ள உள்ளகச் சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ முறைமைகளை முன்னேற்றுதல்.

**2.2. செயலாற்றல்**

---

**2.2.1 பிரதான நோக்கங்களுக்குரிய பணிகளிலிருந்து புறம்பாக செயற்படுதல்**

---

2017 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் செயன்முன்னேற்றத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்கள் பின்வருமாறுள்ளது.

இலங்கை சமூக பின்புலத்தில் அநாதையான, கைவிடப்பட்ட மற்றும் கவனிப்பாரற்ற பிள்ளைளினதும், சட்ட ரீதியான பிரச்சனைகளுக்கு உள்ளாகிய சிறுவர்களினதும் உரிமைகள், பூரண அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க கொள்கை வழங்கல், அமுல்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள், மதிப்பீடு போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி சர்வதேச பொறிமுறையொன்றாக செயற்படுத்தல்

திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதிலும் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் 60 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சர்வதேச விஞ்ஞாபனங்களுக்கு இணங்க தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதற்குரிய சட்ட வழங்கல்கள் என்பன 2017 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 227 இரட்டைக் குழந்தைகளுக்கு உதவி வழங்குவதற்காக 23 மாவட்டச் செயலகங்களிற்கு ரூபா 893,000 தொகையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மாவட்டச் செயலகங்களால் வழங்கப்பட்ட எழுத்துமூல உடன்படிக்கையின் பிரகாரம், 126 இரட்டைக் குழந்தைகளுக்காக ரூபா 537,500 தொகையான உதவி மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், செயலாற்றல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட இலக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இயலாதிருந்தது.

(ஆ) 229 நலனாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் அவசர உதவியாக ரூபா 1.13 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது என செயலாற்றல் அறிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பிரதேச செயலாளர்களால் அனுப்பப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 0.618 மில்லியன் மாத்திரம் 109 நலனாளிகளுக்காக வழங்கப்பட்டிருந்தது.

(இ) சிறுவர்களின் சமூக பாதுகாப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 96.22 மில்லியன் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களமானது செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 25 நடவடிக்கைகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருந்தது. அதனுடைய செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 5.5 மில்லியன் தொகையான ஏற்பாடு வழங்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளின் பின்வரும் 04 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்களிற்காக நோக்குநிலைப் பயிற்சி பட்டறையொன்றை நடாத்துதல்.
- சிறுவர் சமூகங்கள் / சிறுவர் கழகங்களில் இயலாமைச் சிறுவர்கள் செயற்றிறனுடன் பங்களிப்புச் செய்யும் வகையில் விசேட நடவடிக்கைகள் எடுத்தல்.
- வருடாந்த தேசிய ஆய்வரங்கை நடாத்துதல், இலங்கையில் கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணல்,
- செயற்பாடுகளினை ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

(ii) சிறுவர்களுடன் வேலை செய்கின்ற அனைத்து பராமரிப்பாளர்களையும் பயிற்றுவித்தல் மற்றும் அலுவலகர்களுக்காக இயலுமையை கட்டியெழுப்பல் போன்ற இரண்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 3.720 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றின் செயன்முன்னேற்றம் முறையே 20 மற்றும் 15 ஆன குறைந்த சதவீதமாகவிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதி வரையில் பதிவு செய்துள்ள சிறுவர் சங்கங்களின் எண்ணிக்கை 4,445 ஆகும். தேசிய சிறுவர் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1.67 மில்லியன் தொகையை திணைக்களம் செலவழித்திருந்ததுடன் சிறுவர் சபைகளை தாபித்தல், காணப்படுகின்ற சிறுவர் கழகங்களை செயற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்றவற்றிற்காக ரூபா 8.1 மில்லியன் 25 மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், சிறுவர் கழகங்களை தொடர்ச்சியாக செயற்பாட்டு நிலையில் பராமரித்து மற்றும் இயலுமான வகையில் தயாரிக்கப்பட்ட பொருத்தமான நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதற்காக உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட 12,093 சிறுவர் துஷ்பிரயோகங்களில் 6,232 முறைப்பாடுகளுக்காக மாத்திரம் முழுமையான தீர்வு வழங்கப்பட்டிருந்தது. 3,569 முறைப்பாடுகளுக்காக குறுங்கால தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2,268 முறைப்பாடுகள் தீர்வுகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. 24 முறைப்பாடுகளுக்காக தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த பிள்ளைகளின் முறைப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட தீர்வுகள் தொடர்பாக திணைக்களம் பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) சிறுவர் இல்லங்களின் மேற்பார்வைக்கான செலவினக் குறிப்பீட்டின் கீழ் ரூபா 5 மில்லியன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 140 சிறுவர் இல்லங்களை பராமரிப்பதற்காக ரூபா 4.969 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், மொத்த ஏற்பாட்டை செலவழிப்பதன் மூலம், 16 சிறுவர் இல்லங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 13 சிறுவர் இல்லங்களை புனரமைப்பதற்காக ரூபா 5 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. 7 சிறுவர் இல்லங்களானது ரூபா 4.923 மில்லியன் செலுத்துவதன் மூலம் மீளாய்வாண்டின் போது புனரமைக்கப்பட்டது என செயன்முன்னேற்ற அறிக்கை குறிப்பிடப்பட்டது. எனினும், 4 சிறுவர் இல்லங்களை மாத்திரம் ரூபா 4.689 மில்லியனை செலவழிப்பதன் மூலம் புனரமைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டில் சமூக அடிப்படையிலான சிறுவர் பராமரிப்பினை வலுப்படுத்துவதற்காக 05 வெகுசன ஊடக மற்றும் பிரசுரங்களின் தொகுப்பாக்கத்திற்காக ரூபா 610,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 562,000 ஏற்பாடு திணைக்களத்தின் இணையத்தளத்தை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) தோட்டத்துறைகளில் சிறுவர் உரிமைகள் பற்றி 200 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 01 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 0.859 மில்லியனை செலவழிப்பதன் மூலம் 32 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஐ) மனித வளங்கள் அபிவிருத்தியின் கீழ் திணைக்களத்தின் வளநபர் குழுவின் முன்னேற்ற நோக்கத்திற்காக 3 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 361,000 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொத்த ஏற்பாட்டை பயன்படுத்துவதனால் ஒரேயொரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஒ) சிகிச்சைகளை நடாத்துவதன் மூலம் நகர சிறுவர்கள் மற்றும் அவர்களுடைய பாதுகாவலர்களின் சுகாதார மற்றும் போசனைகளினை முன்னேற்றும் நோக்கத்துடன் 08 இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 200,000 ஏற்பாடு

வழங்கப்பட்டிருந்தது. ரூபா 157,000 ஐ செலவழித்து 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தியிருந்தது என செயன்முன்னேற்ற அறிக்கைகள் காட்டுகின்ற போதும் 04 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. மொனறாகலை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 30,000 ஏற்பாட்டில் 15 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணமானது நோக்கத்திற்கு முரணாக வழங்கப்பட்டிந்தது. நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்கான செலவின அறிக்கைகள் இன்னொரு மாவட்டத்தின் செயன்முன்னேற்றம் மீதான அறிக்கைகள் போன்றன கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2.3 பெறுகைச் செய்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

அரசாங்க பெறுகைச் செயன்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு திணைக்களத்திற்கு ரூபா 5.034 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 4.495 மில்லியன் பயன்படுத்துவதன் மூலம், பின்வரும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

| **செலவினக் குறியீடு** | **செலவினக் குறியீட்டு வழங்கல்களின் விபரம்** | **மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 1201 | நானாவிதம் மற்றும் அலுவலகத்திற்கு தேவையானவைகள் | 2.3 | 2.2 | 0.1 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 1.3 | 0.967 | 0.333 |
| 1204 | மருத்துவ வழங்கல்கள் | 0.034 | 0.028 | 0.006 |
| | **மூலதனச் சொத்துக்களின் சுவீகரித்தல்** | | | |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 1.4 | 1.3 | 0.1 |
| | **மொத்தம்** | **5.034** | **4.495** | **0.539** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பெறுகையினை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்

(i) அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 4.2.1(அ) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வழிகாட்டியின் 4.2.2(அ),(ஆ) ஆம் பிரிவுகளின் பிரகாரம், பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகை நடவடிக்கைகளுக்காக விரிவான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தயாரிக்கப்பட்ட பெறுகைத்திட்டம் வருடாந்தப் பாதீட்டுடன் இணங்கியிருக்கவில்லை.

## (ஆ) பெறுகை செயன்முறையினை அமுல்படுத்தல்

(i) சிறுவர் உரிமைகள் தொடர்பில் 4 காணொளிகளினை தயாரிப்பதற்கு ரூபா 1.81 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிகளின் 5.3.1(ஈ) ஆம் பிரிவுகளின் பிரகாரம், விலைமனு ஆவணங்கள் பரீட்சிக்கப்படாமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவில் அனுமதிக்கப்படாமை, குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் விலைமனு பிணையை விலைமனுதாரர் சமர்ப்பிக்காமை, விலைமனுவை சமர்ப்பிப்பதற்குரிய ஆகக்குறைந்த காலத்தை கருத்திற்கொள்ளாமை குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விலைமனுவைத் திறத்தலிற்கான பதிவேடுகளை கொண்டிராமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(ii) பறாற்றாவிலுள்ள சிறுவர் பயிற்சி ஆலோசனை நிலையத்திற்கு ரூபா 1.19 மில்லியன் பெறுமதியான கெமரா முறைமையை பொருத்துவதற்கான பெறுகையின் கீழ் பெறுகை வழிகாட்டிகளின் 2.6(அ)(ii) ஆம் பிரிவின் பிரகாரம் விதப்புரைகளானது மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகை வழிகாட்டல்கள் 1.2.1(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் விலைமனுக்களை கோராமல் ரூபா 100,000 ஐ செலவழிப்பதன் மூலம் அரங்கொன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

## 2.4 வாகனங்களின் பயன்பாடு

மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களம் 5 வாகனங்களை கொண்டிருந்தது. அதில் 75,537 கிலோமீற்றர்கள் ஓடப்பட்டிருந்தது. எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்க்காக ரூபா 620,408 தொகையும், வாகனங்களின் சேவைக்காக ரூபா 237,740 தொகையும், வாகனங்களை திருத்துவதற்காக ரூபா 1,153,716 தொகையும் வாகனங்களின் காப்புறுதிக்காக ரூபா 310,936 தொகையுமாக சேர்த்து மொத்தமாக ரூபா 2,322,800 மொத்த தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. சாரதிகள் சம்பளங்கள் மற்றும் படிகளை மிகைத்து கழித்து திணைக்களமானது வாகனங்களை ஓட்டுவதற்காக ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 30 ஐ செலவழித்திருந்தது.

| வாகனத்தின் வகை | வாகனத்தின் எண்ணிக்கை | பெறுமதி | சாரதிகள் சம்பளங்கள் மற்றும் படிகள் தவிர்த்து ஏனைய செலவினங்கள் | ஓடப்பட்ட கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை | ஓடப்பட்ட கிலோ மீற்றர்களிற்கான செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | ரூபா |
| கப் | 01 | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 562,238 | 20211 | 19.92 |
| கார் | 01 | 3,058,323 | 628,062 | 22890 | 27.31 |
| வேன் | 02 | 10,550,000 | 589,214 | 30491 | 34.86 |
| ஜீப் | 01 | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 543,286 | 1945 | 109.86 |

**2.5 எரிபொருள் நுகர்வை பரீட்சிக்காமை**

திணைக்களத்திற்கு சொந்தமான 05 வாகன எரிபொருளின் நுகர்வானது 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் மீள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2018 யூன் 25 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் இந்த காணொளி பயிற்சி நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக சிறுவர்களுக்கு அவர்களுக்கு உரிமைகள் மீது கவனயீர்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் 4 மீளாய்வாண்டின் கருப்பொருட்களின் கீழ் 4 காணொளிகளை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது 1.81 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**2.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்தி**

சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த திணைக்களத்துடன் தொடர்புடைய கணக்காய்வுப் பந்திகளிற்கான தொடர்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் தொடர்பு | | |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | **விடயம்** |
| 2016 | 4(iv) | குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிகளின் அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட 3 ஆராய்ச்சிகளின் சிபாரிசுகள் மற்றும் தீர்வுகள் போன்றவற்றிற்கு செலவழிக்கப்பட்ட ரூபா 4.9 மில்லியன் தொகையானது சபையின் இலக்குகளினை அடைந்துகொள்வதற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| | 4(அ) | 1956 இல் திணைக்களம் தொடங்கியதிலிருந்து சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பில் உலக பட்டயத்திற்கு இணங்க தேசிய கொள்கையை தயாரித்தலும் அட்டவணை உருவாக்கலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**2.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் 2017 யூன் 28 இன் 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்தின் கீழுள்ள செலவுக் கட்டுப்பாட்டாளர் தலைமை அதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அனுப்பப்பட்ட அறிக்கைகளின் உண்மைத்தன்மை போன்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்காமல் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

**2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை அடைதல் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உண்மையான வெற்றிங்கள் மற்றும் மிகையான பதவியணியினர் நிலைமைகளின் விபரங்கள் பின்வருமாறுள்ளது. திணைக்களமானது மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 15,564,918 தொகையை செலவழித்திருந்தது. ஆகையால், நபரொருவருக்கான செலவினம் ரூபா 34,820 ஆகிவிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணி |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 238 | 236 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 228 | 193 | 35 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 | - |
| (v) | அமைய / ஒப்பந்த நிலை | - | 01 | - | 01 |
| | | **489** | **447** | **43** | **01** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 43 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் திட்டங்களை தயாரித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையும், இரண்டாம் நிலையில் 35 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் திட்டத்தை அமுல்படுத்துவதில் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.